**தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூலை 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முற்பணக் கணக்கு மீதி ரூபா 6,648,748,415 ஆக இருந்ததுடன் திறைசேரி அறிக்கைகளின் பிரகாரம் குறித்த மீதி ரூபா 6,648,923,249 ஆக இருந்தது, ஆகையால் ரூபா 174,834 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிற்கு கொண்டு வர வேண்டும். |

**(ஆ) வணிக முற்பணக் கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா | இணங்கப்படுகின்றது. | சரியாக கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 192,233,776 ஆக இருக்க வேண்டிய போதிலும் ஐந்தொகையில் அப் பெறுமதி ரூபா 115,492,778 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறான காணி மற்றும் கட்டிடங்களிற்கான திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 87,861,925 ஆக காணப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஐந்தொகையில் இது ரூபா 164,602,922 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 76,740,997 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்த அதே நேரம் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 76,740,997 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டில் கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 11,120,929 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 87,861,925 தொகை அந்த ஆண்டின் பெறுமானத்தேய்வுப் பெறுமதியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. இதனால் இலாபம் ரூபா 76,740,997 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இணங்கப்படுகின்றது. | சரியாக கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**(இ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 30,439,165 பெறுமதியான சொத்துக்கள் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் சொத்துக்கள் உள்ளிடப்படுகின்றன. | நிலையான சொத்துக்கள் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ii) | இசுருபாய மற்றும் மஹரகம புத்தக நிலையங்களில் உள்ள பாடப் புத்தகங்கள், துணைப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டிகள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு | இசுருபாய மற்றும் மஹரகம புத்தக நிலையங்கள் பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகளை பூர்த்தி செய்து அது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களிலும் அவ் இருப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் புத்தகங்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூபா 16,987,250 தொகையான மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | இணங்கப்படுகின்றது. | சரியாக கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) | பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான செலவினங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் கீழ் நிதி வழங்கப்படுகிறதுடன் மாணவர்களிடையேயான இலவச விநியோகத்திற்காக கல்வி அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு அந்த புத்தகங்களின் பெறுமதி இந்த வருடத்தின் வியாபார புரள்வாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய இலாப மீதி ரூபா 1,970,635,235 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது ஒரு பெயரளவு பெறுமதி மாத்திரமேயாகும். | உண்மையான வருமானப் பெறுவனவு இல்லை. | ஐந்தொகையில் உண்மை நிலைமையை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 வங்கி கணக்குகளின் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 283 நிகழ்வுகள் தொடர்பாக ரூபா 15,132,501 இனங்காணப்படாத பெறுவனவுகள் காணப்பட்டன. | இது தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 03 (ஆ) பந்திகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் விபரமாக தெளிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XVIII ஆம் அத்தியாயம் | இந்த விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாக 05 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையான காலமாக 38 உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி ஆகியவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு வருகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

3.2 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டில் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்திற்கு கிடைத்த ரூபா 5,758,993 நிதியேற்பாட்டை செலவிட்டு ”யாலு யாலு யாலுவோ” என்ற குழந்தைகளுக்கான கதைப் புத்தகத்தின் 228,950 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவற்றில் 28,600 புத்தகங்கள் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. | எரிபொருள் நெருக்கடி காரணமாக குறித்த புத்தக இருப்புக்களின் விநியோகம் தோல்வியடைந்துள்ளது. | முறையான வகையில் புத்தகங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான முகாமைத்துவத்தின் பிரகாரம் செயற்திட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாடப்புத்தக விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் பெறப்பட்ட போதிலும், கேள்விகள் சமர்ப்பிக்கப்படாத | பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் பெறுகை |

| | | |
|---|---|---|
| வாகனங்கள் புத்தகங்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றமையும் சில ஒப்பந்த வாகனங்களிற்கு உரிய உடன்படிக்கை நடைமுறைக்கு வந்துள்ள போதிலும் அவை போக்குவரத்து முகவராண்மைகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தகங்களின் தேவையை கண்டறிய தவறியதால் 2018 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே ரூபா 83,680,906 மற்றும் ரூபா 8,484,244 பெறுமதியான புத்தகங்கள் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,646,512 பெறுமதியான புத்தகங்கள் மீளாய்வாண்டில் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். | இணங்கப்படுகின்றது. | ஆண்டுக்கான பாடப் புத்தகங்களின் தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 மே 31 இல் உள்ளவாறு தனியார் அச்சிடல் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அச்சிடல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய முறையே ரூபா 29,246,583 மற்றும் ரூபா 11,087,962 பெறுமதியான 365,715 மற்றும் 125,415 புத்தகங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் புத்தகங்களை முறையாக விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டது. | பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் முறையாக புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இனங்காணப்படாத பெறுமதியுடன் கூடிய ரூபா 3,458,061 பெறுமதியான 53 வகையான ஆசிரியர் வழிகாட்டிகளின் 153,056 பிரதிகளும், ஆசிரியர் கையேடுகளின் 3,485 பிரதிகளும் வருடாந்தத் தேவைப்பாடுகள் | பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களின் வருடாந்த தேவைப்பாடுகள் மற்றும் மீதமுள்ள புத்தகங்க இருப்புக்கள் ஆகியவற்றைக் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மிகுதிப் புத்தக இருப்புக்கள் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் அச்சிடப்பட்டதன் காரணமாக களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. | | கருத்தில் கொண்டு புத்தகங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2009 ஆம் ஆண்டு முதல் அச்சிடும் கட்டணமாக ஒரு தனியார் கம்பனியிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 7,431,012 தொகை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொது நிதித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 48 வெற்றிடங்கள் உள்ளதுடன் இந்த வெற்றிடங்களில் 01 கலைஞர் பதவியும் பாடப்புத்தகங்களைத் தயாரிக்கத் தேவையான 04 கணனி தாள் மாற்றம் செய்தல் (Computer Page Editing) பதவியும் உள்ளடங்கியிருந்தன. | இணங்கப்படுகின்றது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |